நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), செங்கல்பட்டு மண்டலம்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : **திரு. V.M. ராஜேந்திரன், பி.இ.,**

ந.க.எண். 1376/17 செம3 நாள் : 31.10.17

பொருள் : தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பெருமாட்டுநல்லூர் ஊராட்சி, கன்னிவாக்கம் கிராமம், சர்வே எண்கள். 16/142, 28, 32, 33-ல் 15344.0 சமீ பரப்பு கொண்ட ஏற்கனவே ஒப்புதலளிக்கப்பட்ட மனையிடத்தில் பிளாக் A,B,C,D ஆகிய நான்கு பிளாக்குகள் கொண்ட குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதில் தற்போது பிளாக் B (ம) C மட்டும் நிலைநிறுத்தியும், பிளாக் A மற்றும் D-ஐ மாற்றம் செய்தும், பிளாக் E (ம) F-ஐ கூடுதலாக உத்தேசித்து தரைத்தளம் + மூன்று தளங்களில் மொத்தம் 440 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டுமானங்களுக்கு கட்டிட வரைபட அனுமதி வழங்க தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை கடிதம் எண். 10725/2017/சிபி நாள் : 16.10.17
2. மனுதாரர் M/s. Xs Real Properties அவர்கள் கடிதம் நாள் : 26.05.17
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை கடிதம் ந.க.எண். 17015/2012/பிஏ2 நாள் : 11.12.12
4. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), செங்கல்பட்டு செயல்முறை கடிதம் எண். 3298/2012/செம3 நாள் : 07.02.2013
5. அரசாணை எண். 86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் : 28.03.12
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7486/09/பிஏ2, நாள் : 16.04.2009
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21075/09/பிஏ1, நாள் : 04.4.2012
8. அரசாணை எண். 85, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் : 16.05.17
9. அரசாணை எண். 135, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் : 21.07.17
10. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள் : 24.10.17 (மனுதாரருக்கு முகவரியிட்டது)
11. மனுதாரர் M/s. Xs Real Properties அவர்கள் கடிதம் நாள் : 30.10.17 (ம) 31.10.17 (I & A கட்டணம், நன்னிலை வரி (ம)துணைக்கோள் நகர வளர்ச்சி கட்டணம் செலுத்தப்பட்டது)

---------------

**உத்தரவு :**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பெருமாட்டுநல்லூர் ஊராட்சி, கன்னிவாக்கம் கிராமம், சர்வே எண்கள். 16/142, 28, 32, 33-ல் 15344.0 சமீ பரப்பளவு கொண்ட மனையிடத்திற்கு பார்வை(3)ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் செயலாணை கடிதத்தில் 'A to N' என எல்லையிடப்பட்டு மனைஒப்புதலும், அம்மனையில் பிளாக் A,B,C,D ஆகிய நான்கு பிளாக்கு குடியிருப்புகள் கொண்ட கட்டிட வரைபடங்களுக்கு **க.வ./ந.ஊ.து.இ.(செம) எண். 251/2012** என எண்ணிடப்பட்டு இசைவு அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து பார்வை(4)ல் கண்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) அவர்களின் செயலாணையில் **ம.வ./நஊதுஇ(செம) எண். 15/2013** என எண்ணிட்டு மனை ஒப்புதலும், அம்மனையில் அமையும் குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு **க.வ./ந.ஊ.து.இ.(செம) எண். 08('அ' முதல் 'ஊ' வரை)/2013** என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது பார்வை(1)ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் செயலாணையில் மேற்படி மனையிடத்தில் பிளாக் B (ம) C மட்டும் நிலைநிறுத்தியும், பிளாக் A மற்றும் D-ஐ மாற்றம் செய்தும், பிளாக் E (ம) F-ஐ கூடுதலாக உத்தேசித்தும் தரைத்தளம் + மூன்று தளங்களில் மொத்தம் 440 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டுமானங்களுக்கு கீழ்கண்ட கட்டிட பரப்புகளுடன் உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்திய வரைபடங்களுக்கு **க.வ./ந.ஊ.இ.எண். 240/2017** என எண்ணிடப்பட்டு இசைவு அளிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கீழ்கண்டவாறு உத்தேசித்துள்ள திருத்திய குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு **க.வ./ந.ஊ.து.இ(செம) எண்.35 ('அ' முதல் 'ஐ' வரை)/2017 (9 தாள்கள்)** என எண்ணிடப்பட்டு பின்வரும் நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்படுகிறது.

| பிளாக் மற்றும் தளங்களின் விபரம் | FSI Area சமீ-ல் | குடியிருப்புகள் விபரம் |
|---|---|---|
| **Block – A :** | | |
| தரை தளம் | 870.84 | 17 குடியிருப்புகள் |
| முதல் தளம் | 887.41 | 18 குடியிருப்புகள் |
| இரண்டாம் தளம் | 887.41 | 18 குடியிருப்புகள் |
| மூன்றாம் தளம் | 887.41 | 18 குடியிருப்புகள் |
| **Block – D :** | | |
| தரை தளம் | 1062.98 | 19 குடியிருப்புகள் |
| முதல் தளம் | 1066.89 | 19 குடியிருப்புகள் |
| இரண்டாம் தளம் | 1066.89 | 19 குடியிருப்புகள் |
| மூன்றாம் தளம் | 1066.89 | 19 குடியிருப்புகள் |

| | | |
|---|---|---|
| **Block – E :** | | |
| தரை தளம் | 1407.74 | 36 குடியிருப்புகள் |
| முதல் தளம் | 1441.54 | 38 குடியிருப்புகள் |
| இரண்டாம் தளம் | 1441.54 | 38 குடியிருப்புகள் |
| மூன்றாம் தளம் | 1441.54 | 38 குடியிருப்புகள் |
| **Block – F :** | | |
| தரை தளம் | 1341.80 | 29 குடியிருப்புகள் |
| முதல் தளம் | 1441.54 | 38 குடியிருப்புகள் |
| இரண்டாம் தளம் | 1441.54 | 38 குடியிருப்புகள் |
| மூன்றாம் தளம் | 1441.54 | 38 குடியிருப்புகள் |

OSR Area = 1555.0 சமீ

OSR பரப்பு தானப்பத்திர எண். 13022/12-ல் உள்ளாட்சிக்கு ஏற்கனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

பார்வை(5)ல் கண்ட அரசாணையின்படி கூடுதல் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி கட்டணம், நன்னிலை வரி (ம) துணைக்கோள் நகர வளர்ச்சி கட்டணம் ஆகியன அரசுக்கு செலுத்தக் கோரி, பார்வை(10)ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் மூலம் கோரப்பட்டு, பார்வை(11)ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கூடுதல் I & A கட்டணம் ரூ.**51,37,500/-**, நன்னிலை வரி ரூ. **44,000/-** (ம) துணைக்கோள் நகர வளர்ச்சி கட்டணம் ரூ.**4,79,900/-**, ஆகியன பெறப்பட்டுள்ளது.

**சிறப்பு நிபந்தனைகள் :**

1. The Project proponent/Applicant shall not commence any activity, excepting fencing of the site and construction of temporary shed for guard, without obtaining Environmental clearance under the EIA Notification, 2006 from the State Level Environment Impact Assessment Authority or the Ministry of Environment and Forests, Government of India, as applicable to the project, as per the threshold limits. Any violation from the above requirement is liable for action under section 19 of the Environment (Protection) Act, 1986.
2. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
3. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
4. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

5. Applicant should obtain consent from Tamilnadu Pollution Control Board under Section 25 of the Water Act 1974 for discharge of sewage
6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
7. The Licence renewal of Structural Engineer from the local body should be submitted before issuing planning permission.
8. LIG/EWS/Dwelling units should not be amalgamated.
9. The Tamilnadu Government in G.O. (Ms) No. 112, H & UD (UD4(3)), Department, dated : 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016, the promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any matter any plot, apartment or building, as in the case may be, in any Real Estate Project with the Real Estate Regulatory Authority.
10. The Provisions in the G.O. (Ms) No. 17, H & UD (UD4(3)), Department, dated : 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.
11. பார்வை(1)ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணையில் கண்ட நிபந்தனைகள் யாவும் நிறைவு செய்யப்பட வேண்டும்.

<u>நிபந்தனைகள் :-</u>

1. உத்தேச திருத்திய தொகுப்பு குடியிருப்பு உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.

7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண். 341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் : 03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U"Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்தரவு (ம) இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலாணை கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்பு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), பெருமாட்டுநல்லூர் ஊராட்சி/காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் இறுதி உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலாணை கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச் சான்றினை அனுப்பி வைக்குமாறு தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), பெருமாட்டுநல்லூர் ஊராட்சி/காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

31.10.17

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ),
செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு.

31/10/17

இணைப்பு : ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடம் - 2 தொகுப்புகள்
(9 x 2 = 18)

பெறுநர் : தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்,
பெருமாட்டுநல்லூர் ஊராட்சி/காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல் : M/s. Xs Real Properties,
12, South Mada Street,
Srinagar Colony, Saidapet,
Chennai – 15.

பெருமாட்டுநல்லூர் ஊராட்சி தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை - திரு.மு.சிவகலைச்செல்வன்

ந.க.எண். 2285/2017/அ1 நாள் - 03.11.2017

பொருள் தொகுப்பு குடியிருப்பு கட்டிட வரைபட அனுமதி - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - பெருமாட்டுநல்லூர் ஊராட்சி, கன்னிவாக்கம் கிராமம், கூடுவாஞ்சேரி ( P.O ) - 603 202 நில அளவை எண் 16/142, 28, 32. 33-ல் 15344.0சதுர மீட்டர் பரப்பு கொண்ட ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட மனை இடத்தில் பிளாக் A, B, C, D ஆகிய நான்கு பிளாக்குகள் கொண்ட குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதில் தற்போது பிளாக் B (மற்றும்) C மட்டும் நிலை நிறுத்தியும், பிளாக் A மற்றும் D-யை மாற்றம் செய்தும் பிளாக் E மற்றும் F –யை கூடுதலாக உத்தேசித்து தரை தளம் + மூன்று தளங்களில் மொத்தம் 440 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டுமானங்களுக்கு கட்டிட வரைப்பட அனுமதி வழங்கி உத்தரவிடல்.

பார்வை 1) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம் ந.க.எண்.1376/17/செ.ம.3 நாள்.31.10.2017

2)இவ்வலுவலக மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ( ZONE - 2 ) அவர்களின் ஆய்வறிக்கை நாள் 02.11.2017

*********

உத்தரவு

M/s.Xs Real Properties என்ற நிறுவனத்தின் காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - பெருமாட்டுநல்லூர் ஊராட்சி, கன்னிவாக்கம் கிராமம், கூடுவாஞ்சேரி ( P.O ) - 603 202 நில அளவை எண் 16/142, 28, 32, 33-ல் 15344.0சதுர மீட்டர் பரப்பு கொண்ட ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட மனை இடத்தில் பிளாக் A, B, C, D ஆகிய நான்கு பிளாக்குகள் கொண்ட குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதில் தற்போது பிளாக் B (மற்றும்) C மட்டும் நிலை நிறுத்தியும், பிளாக் A மற்றும் D-யை மாற்றம் செய்தும் பிளாக் E மற்றும் F –யை கூடுதலாக உத்தேசித்து தரை தளம் + மூன்று தளங்களில் மொத்தம் 440 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டுமானங்களுக்கு கட்டிட வரைபடத்திற்கு தொகுப்பு குடியிருப்பு கட்டிட வரைபட அனுமதி / தனி அலுவலர் (செமு) எண் - 51 /2017 - 2018 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த அனுமதியானது 03.11.2017 நாள் முதல் 02.11.2022-ம் நாள் வரை ஐந்து ஆண்டுக்கு செல்லுபடியாகும். அனுமதி கட்டணம் ரூ.7,12,860/- (ரூபாய் ஏழு இலட்சத்து பனிரெண்டாயிரத்து எண்ணூற்று அறுபது மட்டும்) செலுத்தியமைக்கான பலவகை ரசீது எண் 340 நாள் 03.11.2017 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

<u>நிபந்தனைகள்</u>

1. கட்டிடத்தின் முன் பக்கத்தில் 1 மீட்டருக்கு குறையாமலும், பின் பகுதியில் 1 மீட்டருக்கு குறையாமலும் இருபக்கங்களிலும் 1 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலே ஆக்கிரமணம் செய்வது கூடாது.
4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.
5. இந்த உத்தரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையறுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.
6. நகர் ஊரமைப்பு துறை, தொழில் நுட்ப அனுமதி வழங்கியதின் அடிப்படையில் ஊராட்சி மூலமாக கட்டிட வரைபட அனுமதி வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர் சமர்பித்த ஆவணங்களில் ஏதேனும் தவறோ, அல்லது மாறுதல் ஏதேனும் இருந்தாலும், நீதிமன்றங்களில் ஏதேனும் வழக்கு தொடரப்பட்டாலும் அல்லது தணிக்கை தடையில் ஏதேனும் தவறுகள் சுட்டிகாட்டப்பட்டாலும், அது முழுமையாக விண்ணப்பதாரரையே சாரும்.
7. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் / நிர்வாக அதிகாரிக்கு / தனி அலுவலருக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகு தான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.
8. கட்டிடம் கட்ட உத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்திரவை ரத்து செய்ய தலைவருக்கு/ தனி அலுவலருக்கு உரிமை உண்டு.

9. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் அவசியம்
10. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்.
11. புறம்போக்கு மற்றும் இதர அரசுக்குச் சொந்தமான இடங்களில் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
12. கட்டிடத்திலிருந்து வரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும், கழிவு நீர்த் தொட்டிகளும் அமைத்துக் கொள்ள வேண்டும்.
13. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படமிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்து மற்றும் உறுப்பினர்செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
14. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.
15. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் தலைவர் / தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.
16. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகளில் குறிப்பிட்டுள்ளப்படி நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் முறையாக பின்பற்றப்பட வேண்டும்.

தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
பெருமாட்டுநல்லூர் ஊராட்சி.

03/11/17

3.11.2017

பெறுநர்

M/s.Xs Real Properties,
12, South Mada Street,
Srinagar Colony, Saidapet,
Chennai – 15.